Registered as a news paper.

பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**Dialog** டயலொக்

100/-,400/-,1000/- விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டு பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

kit எந்நேரமும் உன்னுடன்....

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Sri Murugan
Tele Communication & Agency
Post Office,
303, K.K.S. Road, Jaffna.

T.P : 021 222 5392,
Fax : 021 222 3214
E.Mail : srimurugan@eureka.lk

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | சித்திரை 27 | ஹிஜ்ரி 1427 | ற.ஆகிர் 11 | (10.05.2006) | புதன்கிழமை | இதழ் 222

## தமிழர் மீதான வன்முறைகளை நிறுத்தாவிடின்

# தீர்க்கமான முடிவெடுப்போம்!

## தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை



கிளிநொச்சி

**தமிழ்மக்களைப் படுகொலை செய்து இலங்கை அரசு தமிழர்கள் மீது முழு அளவிலான போரைத் தொடுத்திருக்கிறது. இந்த வன்முறைப் போக்கை முடிவுக்குக் கொண்டுவராவிடின் புலிகளின் தலைமைப்பீடம் தீர்க்கமான முடிவை எடுக்கும் நிலை ஏற்படும் என்று தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**ஜப்பானிய விசேட தூதர் யசூஷி அகாஷியை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது -** **(08 ஆம் பக்கம் பார்க்க)**

## அகாஷி -தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் சந்திப்பு!

கிளிநொச்சி

ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ சுட்டா மற்றும் அதிகாரிகள் சகிதம் கிளிநொச்சிக்கு வந்த அகாஷியை சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலித்தேவன் உள்ளிட்டோருடன் இவர் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய நிலைமை மற்றும் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

## அரசின் விசேட அறிக்கை இன்று வெளியிடப்படும்!

கொழும்பு

நாட்டின் தற்போதைய சமாதான சூழ்நிலை தொடர்பாக அரசாங்கம் இன்று காலை 9 மணிக்கு விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுமென அரசாங்க செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த விசேட அறிக்கையை அரச சமாதான பேச்சுக்குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிடவுள்ளார்.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டை அரச சமாதானக்குழு வெளியிடும் எனவும் நம்பப்படுகிறது.

இதேவேளை - ஜப்பானிய விசேட தூதுவர் இன்று முற்பகல் விசேட செய்தியாளர் மாநாட்டுக்கு கொழும்பு ஊடகவியலாளர்களை அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி

ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ சுட்டா மற்றும் அதிகாரிகள் சகிதம் கிளிநொச்சிக்கு வந்த அகாஷியை சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலித்தேவன் உள்ளிட்டோருடன் இவர் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது தற்போதைய நிலைமை மற்றும் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

கொழும்பு

நாட்டின் தற்போதைய சமாதான சூழ்நிலை தொடர்பாக அரசாங்கம் இன்று காலை 9 மணிக்கு விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுமென அரசாங்க செயலகப் பணிப்பாளர் பாலித கொஹன்ன தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த விசேட அறிக்கையை அரச சமாதான பேச்சுக்குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிடவுள்ளார்.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டை அரச சமாதானக்குழு வெளியிடும் எனவும் நம்பப்படுகிறது.

இதேவேளை - ஜப்பானிய விசேட தூதுவர் இன்று முற்பகல் விசேட செய்தியாளர் மாநாட்டுக்கு கொழும்பு ஊடகவியலாளர்களை அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இணைத்தலைமை கூட்டத்துக்கு இந்தியாவுக்கும் அழைப்பு



## விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவிப்பு

கிளிநொச்சி

டோக்கியோவில் இந்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்க இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக யசுஷி அகாஷி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர்களிடம் அகாஷி கூறியதாவது -

இந்தச் சந்திப்பு பயனுள்ள வகையில் இருந்தது. (08 ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

## வலியுறுத்துகிறது இந்தியா

புதுடெல்கி

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் விரைவாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அகமத்தை நேற்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்தபோதே - இந்தியாவின் நிலைப்பாடு குறித்துத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை அரசு சமாதானப் பேச்சுக்களை ஒதுக்கிவிடாமல் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். (08 ஆம் பக்கம் பார்க்க)

# ஆழ ஊடுருவும் படையினரால் இரு வயோதிபர் படுகொலை!

வவுனியா

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியான மாங்குளத் துக்கு வடக்கே சவரிக்குளம் காட்டுப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற இருவர் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி சாந்தபுரத்தைச் சேர்ந்த தொப்பிளான் பெரியசாமி (வயது 60), திருவையாற்றைச் சேர்ந்த சோமதாச வீரக்கொடி (வயது 50) ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த இரண்டாம் திகதி விறகு வெட்டச் சென்ற இருவரும் வீட்டுக்குத் திரும்பவில்லை. இதனையடுத்து சில நாட்களாக இவர்களை உறவினர்கள் தேடிவந்தனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் நாடாளுமன்றில் உண்ணாவிரதம்!

கொழும்பு

இராணுவத்தினராலும், துணை ஆயுதக் குழுவினராலும் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தக் கோரி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தின் முன்பாக கண்டன உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 11 மணிக்கு நாடாளுமன்றத்தின் முன்பாகக் கூடிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு - கிழக்கில் நீதிக்குப் புறம்பாக அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவம் மற்றும் துணை ஆயுதக் குழுவினரால் படுகொலை செய்யப்படுவதை அரசாங்கம் தடுத்து நிறுத்தவேண்டும். துணை இராணுவக் குழுவினிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பினர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளை வானில் வந்தோரால் சலூன் உரிமையாளர் கடத்தல்!

## பருத்தித்துறையில் பரபரப்புச் சம்பவம்

பருத்தித்துறை

பருத்தித்துறை நகரில் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் நேற்று மாலை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

பருத்தித்துறை சிவன் கோவிலுக்குப் பின்புறமாக பிரதான வீதியில் சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்திவந்த - தும்பளையைச் சேர்ந்த கோபி என்ற இளைஞரே கடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று மாலை 6 மணியளவில் சிகை அலங்கரிப்பு நிலையத்தில் நின்றிருந்த வேளை வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நான்கு பேர் இவரைக் கடத்திச் (08 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்கள் இலங்கையர் அல்லவென படையினர் நிரூபித்து வருகின்றனர்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்

தமிழர்கள் இலங்கையர்கள் அல்லர். அவர்கள் தமிழீழ தேசத்து மக்கள் என்பதனை இராணுவத்தினர் நிரூபித்து வருகின்றனர் என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ். குடாநாட்டில் ஆக்கிரமிப்பு படைகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழின அழிப்பு நடவடிக்கைகள் இன்று உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அப்பாவித் தமிழ் இளைஞர்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துவிட்டு அவர்களை குண்டு எறிய வந்தார்கள், சுடவந்தார்கள் எனக் கூறும் ஆக்கிரமிப்பு இராணுவம் - தாம் இங்கு இருக்கும் வரை நிம்மதியாக இருக்க முடியாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இது தமிழர்களின் பூர்வீக நிலம். அதனாலேயே இன்று தமிழர்கள் மக்கள் படையாகத் தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டார்கள் என்பதையும் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று யாழ். குடாநாட்டில் ஆக்கிரமிப்புப் படைகளின் அரச வன்முறைகளுக்கு எதிராக அரச எதிர்ப்பு, பணிப்புறக்கணிப்பு இடம்பெற்று வருகின்றது. அது சர்வதேசத்துக்கு தெரியக்கூடாது என்பதற்காக ஆக்கிரமிப்பு படைகள் யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளனர்.

எனவே, எப்படியாவது தமிழினத்தை அழிப்பது என்பதில் ஆக்கிரமிப்புப் படைகள் உறுதியாகவே உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டு வேலிகள் அகற்றல்; மக்கள் பெரும் அவதி!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம், பொன்னாலை, காரைநகர் பகுதிகளில் பிரதான வீதிகளின் இருமருங்கிலுமுள்ள வீடுகளின் வேலிகளை முழுமையாக கடற்படையினர் வெட்டி அகற்றியுள்ளமையால் அந்தப் பகுதி பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளைக் கூட மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர்.

பொன்னாலை, காரைநகர் ஆகிய கிராமங்களிலே குடியிருக்கும் மக்கள் கடற்படையினரின் கெடுபிடிகளால் நாள்தோறும் பெருந்துன்பங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஓர் அங்கமாக இந்தக் கிராமங்களுக்கூடாகச் செல்லும் பிரதான வீதிகளின் இருமருங்கிலுமுள்ள வீடுகளின் வேலிகளை முழுமையாக அகற்றியிட்டனர்.

இதனால் இந்த வீதிகளின் அருகாமையிலுள்ள வீடுகளில் குடியிருக்கும் பொதுமக்கள் காலைக்கடன்களை முடிப்பது மற்றும் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பெரும் அவதிக்குள்ளாகி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# பதில் துணைவேந்தரை நியமிக்க மானிய ஆணைக்குழு தீர்மானம்

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பதில் துணைவேந்தரை நியமிக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருந்த ரட்ணஜீவன் கூல் தனது பொறுப்பை ஏற்காததையடுத்து பல்கலைக்கழக செனட்டின் பரிந்துரைக்கமைய இந்த நியமனம் அறிவிக்கப்படும் என்று மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ரட்ணஜீவன் கூல் மூன்று மாத விடுப்பு கோரியிருந்ததை மானியங்கள் ஆணைக்குழு ஏற்றுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் காமினி சமரநாயக்க பதில் துணைவேந்தர் நியமனம் தொடர்பாக விவாதிக்க யாழ்.பல்கலைக்கழக செனட் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களது பரிந்துரைக்கமைய இந்த நியமனம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செயற்படும் ரட்ணஜீவன் கூலை துணைவேந்தராக நியமித்தமைக்கு யாழ்.மாணவர் சமூகமும் பொது மக்கள் அமைப்புகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

இதனால் கொழும்பிலிருந்தபடியே யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தை நடத்துவேன் என்று ரட்ணஜீவன் கூல் அறிவித்திருந்தார். அதன் பின்னர் பேராசிரியர் எஸ்.பரமேஸ்வரன் பதில் துணைவேந்தராக மானிய ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் இரண்டு நாட்களிலேயே தனது பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

இதையடுத்து செனட் குழுவின் பரிந்துரைக்கமைய பதில் துணைவேந்தரை நியமிக்க மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

# பஸ்ஸில் பயணிப்போரை வல்லையில் கடும் சோதனை

யாழ்ப்பாணம்

வடமாராட்சிக்கும் - யாழ். நகருக்கும் இடையிலான பஸ்ஸில் பயணிக்கும் பொதுமக்களை வல்லைச் சந்தியில் வைத்து இராணுவத்தினர் கடுமையாகச் சோதனையிட்டு வருகின்றனர்.

வடமாராட்சிக்கும் - யாழ்ப்பாணத்துக்குமிடையிலான போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் வல்லைச்சந்தியில் வைத்து இராணுவத்தினர் கடுமையான சோதனைக்கு உட்படுத்தி வருவதுடன் அடையாள அட்டைகளையும் பரிசீலித்து வருகின்றனர்.

அடையாள அட்டையை எடுத்து வராதவர்களை வயது வேறுபாடின்றி வீதியில் இருத்தி வைக்கின்றனர்.

பஸ்ஸில் பயணிப்பவர்கள் அனைவரையும் இறக்கி கடுமையாகச் சோதனையிட்டு வருவதோடு இளைஞர்களை மிரட்டியும் வருகின்றனர்.

இதனால் தொழில் நிமித்தமும் மற்றும் அவசர தேவைகளுக்காகவும் யாழ். நகருக்கு வரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


நிரஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந் - கௌதமி நடித்த
ஆனந்ராஜ்
காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
மூன்றாவது வெற்றி வாரம்
திருப்பதி

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
நேரம் : 10.30,2.30,6.30,9.30


# கல்வியியற் கல்லூரி மாணவர் வீடுகளுக்கு செல்லத் தடை

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டு நிலைமையை அடுத்து அச்சம் காரணமாக வீடுகளுக்குத் திரும்பிய யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்துப் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வன்னியைச் சேர்ந்த 300 வரையான மாணவர்கள் தமது பகுதிகளுக்கு செல்வதற்காக முகமாலை சென்றபோது அங்கு வைத்து படையினரால் மறிக்கப்பட்டனர்.

தற்போது விடுமுறைக்காலம் இல்லை என்றும் அவர்களைத் தொடர்ந்தும் பயணிக்க அனுமதிக்க முடியாது என்றும் தடுத்து நிறுத்திய படையினர் யாழ்ப்பாணத்துக்குத் திருப்பி அனுப்பியுள்ளனர். அந்த மாணவர்களைத் தடுத்து நிறுத்திய படையினர் கடும் விசாரணைக் கெடுபிடிகளுக்கும் உட்படுத்தியுள்ளனர்.

## கச்சேரி நல்லூர் வீதி சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்

யாழ். கச்சேரி நல்லூர் வீதி கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. பல நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டமையால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான நிலைமை காணப்பட்டது.

யாழ். நல்லூர் கச்சேரி வீதி, பருத்தித்துறை வீதி, நல்லூர் குறுக்கு வீதி மற்றும் நாவலர் வீதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இந்தத் தேடுதல் இடம்பெற்றது.

நண்பகல் நேரம் குறிப்பிட்ட சுற்றிவளைப்பு இடம்பெற்றமையால் மக்கள் கொதிக்கும் வெய்யிலில் வைத்து இராணுவத்தினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## முதல் திருப்பலி

யாழ்ப்பாணம்

கிளரீசியன் மறைபோதக குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட மரிய ஸ்ரீவன் சதீஸ் சவரிமுத்து (சி.எம்.எவ்) அடிகளாரின் முதல் திருப்பலி மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு தனது முதல் நன்றித் திருப்பலியை இவர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கவுள்ளார். இந்தத் திருப்பலியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
அகவை ஏழு

பெயர் : ற.தமிழினி
முகவரி : வல்வெட்டித்துறை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு
யாழ் மணிக்கூட்டு வீதி பெருமாள் போவிலடியில் ஒரு பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
[2265]
தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல:0777908684



கரித்தாஸ் கியூடெக்
"ஆண்டவரே உம்மையே நாங்கள் நம்பி இருப்பதால் உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக"
(திருப்பாடல் 33)
சித்திரைத்திங்கள் 10ம் நாள் யாழ். கரித்தாஸ் கியூடெக்கிற்கு ஒரு கரி நாள், அதிர்ச்சி நாள், அவல நாள்.
எம் சக பணியாளர்கள்,
உத்தமசீலர்கள்

திரு. பத்மநாபன்
(சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்)


திரு. பிரதீப்குமார்
(சமூக இசைவாக்கக் குழுத்தலைவர்)
இருவரையும் பலி கொடுத்த நாள்.

பயங்கர யுத்தம், இடப் பெயர்வு, பொருளாதாரத்தடை போன்ற கால கட்டங்களில் உயிரைப் பணயம் வைத்து மக்களோடு ஓடி அவர்கள் துன்பங்கள், துயரங்கள், இழப்புகள் யாவற்றிலும் கை கொடுத்துக் காப்பாற்றி, மனித முன்னேற்றமே நோக்காகக் கொண்டு மனிதாபிமான உணர்வுகளுடன் பணியாற்றுகின்ற இந்த நிறுவனம் 34 வருடங்கள் காணாத துன்பியல் நிகழ்வு கண்டு துயர் கொண்டுள்ளது.

எம் சகோதர பணியாளர்கள் இருவரும் குறுகிய காலம் இந்த நிறுவனத்தில் பணியாற்றினாலும் அளப்பரிய சேவையினை உளத் தூய்மையுடன், உற்சாகத்துடன், அர்ப்பணிப்புடன் நிறைவேற்றிய உத்தமர்கள். "மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், கருமமே கண்ணாயினர்" என்னும் அருஞ் சொற்றொடர்க் கேற்ப, நேரம் களைப்புப் பாராது கடமையாற்றிய சேவைச் செம்மல்கள். உண்மை, நேர்மை, கபடமின்மை போன்ற பண்புகளுடையவர்கள். அன்பு ,அரவணைப்புடன் சுனாமியால் பாதிப்புற்ற சிறுவர்கட்கும் சமூகத்திற்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பயமின்றித் தம் பொறுப்புக்களைப் பணிவுடன் ஏற்று பண்புடன் நிறைவேற்றிய பணியாளர்கள், சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய முறையில் சொல்லி நெறிப்படுத்திய வளவாளர்கள். தம் திட்டங்கள் செவ்வனே நிறைவேற வேண்டும், நிறுவனத்தின் சேவை சிறப்புற அமைய வேண்டும் என்ற சிந்தனையுடன் 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனச் சுட்டிக்காட்டி எம் சிறார்கள், எதிர்காலச் சந்ததியினர் சீர் பெற்று வாழ வேண்டும், நலிவுற்ற நம் சமூகம் தலை நிமிர்ந்து முழு மனித மாண்புடன் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய சிந்தனைச் சிற்பிகள்.

படைத்தவன் அடியில் படைப்புகள் சங்கமம் ஆவது நியதி. இவர்களின் ஆன்மாக்கள் இறை நிழல் அடைய வேண்டி நிற்கின்றோம். அவர்கள் தம் அருமைச் சொந்தங்களுக்கும், அன்பர்கள் நண்பர்களுக்கும் ஆறுதல் நல்க ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*"மண்ணில் வாழ்ந்து செல்லும் நண்பா*
*விண்ணில் இறைவன் இன்பம் தருவார்"*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


(ஆக்கம் செல்வி. பெனடிக்ராஆந்ரேஸ்பிள்ளை)

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
கரித்தாஸ் – கியூடெக்

[C/5323]

# போரைத் தொடங்கவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த கூறினாராம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு —

இனப்பிரச்சினையில் -பேச்சுக்கள் மூலமும் போரின் மூலமும் விடுதலைப்புலிகளே வெற்றி பெறுவார்கள் என்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மகரகம இளைஞர் நிலையத்தில் நடைபெற்ற பொதுக் கருத்தரங்கு ஒன்றில் அவர் பேசியபோது மேலும் தெரிவித்ததாவது -

இனப்பிரச்சினைக்கான பேச்சுக்களானது - இந்த நாட்டை பிளவுபடுத்தும். எனவே, பேச்சுக்களின் மீது நம்பிக்கை கொள்ளாமல் அரசாங்கத்தின் கடைசி மற்றும் சாத்தியமான வழியாக போரைத் தொடங்க வேண் டும்.

பேச்சுவார்த்தைகளை நடத்தினால் - சூடான் தீர்வினூடாக விடுதலைப் புலிகள் ஈழத்தை வென்று விடுவார்கள். மேலும் யுத்தம் நடத்தினாலும் - சைப்ரஸ் தீர்வினூடாகவும் ஈழத்தை அவர்கள் வென்று விடுவார்கள்.

இலங்கையில் இத்தகைய நிலைமை நீடித்தால் சர்வதேச சமூகம் தலையிட நேரும் என்று ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார். மேலும் ஐ.நா. அமைதிப்படையை அனுப்ப வேண்டும் என்றும் அவர் கூறியிருப்பதன் மூலம் இந்தநாட்டில் அரச கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் விடுதலைப் புலிகளின் பகுதி என இரு பிரதேசங்கள் உருவாக்கப்பட்டு விடும்.

போருக்கு அப்பால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. ஒரே நாடு என்ற இலட்சியத்துக்காக மக்கள் எதற்கும் முகம் கொடுக்க மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தயாராகவே உள்ளனர்.

தனிநபர்களது செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான நேரம் இதுவல்ல. அரசியல் வேறுபாடுகளைக் களைந்து, இணைந்து செயற்பட வேண்டிய காலம் இது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது - போரைத் தொடங்கவுள்ளதாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம புதுடெல்கியில் - இந்திய பிரதி வெளியுறவு அமைச்சர் ஆனந்த் சர்மாவை சந்தித்துக் கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# 4 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது

கொழும்பு —

கொழும்பில் மீன் வர்த்தகர் ஒருவர் உட்பட மூன்று தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகருக்குள் லொறி மூலம் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்ய அவர்கள் சதித்திட்டம் தீட்டியதால், கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவரும் மோதரை என்ற இடத்தில் ஒரு வீட்டில் 4 அண்டுகளாக பதுங்கி இருந்ததாகவும் .

சந்தேக நபர்கள் மூவரும் லொறி ஒன்றை வாங்கி - மீன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாகவும், மன்னாருக்கு மீன் வாங்க அந்த வர்த்தகர் சென்று வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே விடுதலைப்புலிகளுக்கு தகவல் கொடுத்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் 26 வயது இளைஞர் ஒருவரை ராகமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பாகத் தனது தகவல் தொடர்பகத்தினூடே புலிகளுக்கு அந்த நபர் தகவல் கொடுத்தார் என்று ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

# மாத்தளை, திருமலையில் பாரிய நிலநடுக்கம் ஏற்படும்?

கொழும்பு —

மாத்தளை மற்றும் திருகோணமலைக்கு இடையேயான நிலப்பகுதியில் நீளமான வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் பாரிய நிலநடுக்கம் ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பைச் சேர்ந்த மூத்த புவியியலாளர் எம்.ஐ.டி.எச் விஜயவிக்கிரம இது தொடர்பாக கூறியதாவது -

மாத்தளை பகுதியில் 500 இற்கும் மேற்பட்ட வீடுகளில் இந்த வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே, நில நடுக்கத்துக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

இத்தகைய வெடிப்புகள் மூலம் அந்தப்பிரதேசத்தில் உள்ள விக்டோரியா அணைக்கட்டுக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பது குறித்தும் ஆய்வு நடத்தியுள்ளோம். பாரிய நில நடுக்கத்தைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை இயற்கைப் பேரிடர் மேலாண்மை மையத்திடம் கையளித்துள்ளோம்.

இது தொடர்பான மேலதிக ஆய்வுகளைத் தேசிய புவியியல் மற்றும் கனிம திணைக்களம், காலநிலை ஆய்வு திணைக்களம் மற்றும் மகாவலி மையத்தினர் இணைந்து நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை- சுனாமியின் பின்னர் மாத்தளைப் பகுதியிலுள்ள கிணறுகளிலிருந்து கருமையான நீர் வெளியேறுவதாகவும் சில கிணறுகளிலிருந்து தண்ணீர் பீறிட்டு வெளியேறுவதாவும் சில சமயங்களில் தண்ணீர் முழுமையாக வற்றிவிடுவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாதுகாப்புக் கவசத்துடனேயே கண்காணிப்புக்குழு பணியாற்றும்

## என்கிறார் ஹென்றிக்சன்

கொழும்பு —

வட - கிழக்கில் அசம்பாவிதங்கள் அதிகரித்து வருவதால் தாம் தலைக் கவசங்கள் மற்றும் உடற் கவசங்கள் அணிந்தே பணியில் ஈடுபடப் போவதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்வ் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் -

வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளால் செல்ல வேண்டியிருப்பதால், முற் பாதுகாப்பாகப் பாதுகாப்புக் கவசம் அணிவது சிறந்தது. கலவரம் குறித்தே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். திடீரென கலவரம் ஏற்பட்டால் அது பெரிய ஆபத்தில் முடியும். கலவரம் எங்கு தொடங்குகிறது என்பது பொருட்டல்ல.

ஆனால், அது ஆபத்தானது. ஆபத்துக் குறித்து விழிப்புடன் இருப்பதே மிகச் சிறந்த பாதுகாப்பு. சற்று அசதியாக இருந்தால் அது ஆபத்தில் முடியும். விழிப்புடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டும். தவறான இடத்தில், தவறான நேரத்தில் இருக்கும் ஒவ்வொரு கண்காணிப்பாளருக்கும் இது பொருத்தமானது.

தற்பொழுது 45 கண்காணிப்பாளர்கள் களப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள். சில சமயம் அவர்கள் சிறிது கவலைப்படுவார்கள். ஆனால் இங்கையில் வேலையைத் தொடங்கிய போதே அது ஆபத்தானது என்று அறிந்ததே. நாம் இங்கு விடுமுறையைக் கழிக்க வரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (01)

# பாலியல் துன்புறுத்தலைத் தடுக்க விசேட குழுக்கள் அமைப்பு

கொழும்பு —

அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் பணியாற்றும் இடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாவதைத் தடுக்க விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

பெண்கள் அபிவிருத்தி அமைச்சு இதற்கான குழுக்களை மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அமைத்துள்ளது.

இந்தக் குழுவின் ஆண்கள், பெண்கள், தொழிற்சங்கத்தினர், அலுவல் சாரா வெளிப் பிரதிநிதிகள் உட்பட 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக்குழுக்களை அமைப்பது தொடர்பான சுற்றறிக்கைகள் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சில நாட்களுக்குள் இந்தக்குழுக்கள் அமைக்கப்படுமென அமைச்சு செயலாளர் இந்திராணி சுகதாச தெரிவித்தார்.

# கொக்கிளாய் பகுதியிலிருந்து சிங்களவர் இடம்பெயர்வு

கொழும்பு —

கொக்கிளாய்ப் பகுதியிருந்து சுமார் 246 குடும்பங்களைச் சேர்ந்த 954 சிங்களவர்கள் இடம் பெயர்ந்து தமது சொந்த இடமான நீர்கொழும்புக்குச் சென்றுள்ளதாக நீர்கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 30 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே புல்மோட்டைக் கடற்பரப்பில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இந்தக்குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இவர்கள் இடம் பெயர்ந்து முதலில் புல்மோட்டைக்குச் சென்று அங்கிருந்து நீர்கொழும்பைச் சென்றடைந்தனர்.

தமது பாரம்பரிய பிரதேசமான கொக்கிளாய் பகுதியிலிருந்து ஒரே இரவில் படையினரால் 46,000 தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு இந்தச் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வட - கிழக்கு தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு?

கொழும்பு —

வடக்கு - கிழக்கில் 15 உள்ளூராட்சி சபைகளுக்கு நடைபெறவிருந்த தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி இந்தத் தேர்தல் நடைபெற இருந்தது. தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான அறிவிப்பை விரைவில் தேர்தல் ஆணையாளர் வெளியிடக் கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# புலிகளுக்கு கடல் விமானம்; அரசு சரணடைவதற்கு சமன்!

## என்கிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு —

விடுதலைப் புலிகளுக்குக் கடல் விமான வசதியை வழங்குவதை அரசாங்கம் கைவிட வேண்டும். அவ்வாறு கடல் விமானத்தை வழங்குவது விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் சரணடைவதற்குச் சமனாகுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கான எந்தவித அருகதையும் இணைத் தலைமை நாடுகளுக்கு இல்லை. இணைத் தலைமை நாடுகளின் அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணியாது தீர்மானங்களை உறுதியாக எடுக்க வேண்டும்.

இணைத்தலைமை நாடுகளின் அழுத்தத்துக்குப் பயந்து விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் கடல் விமான வசதியை வழங்க முன்வந்திருப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

அரசாங்கம் பேச்சுக்களுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதுடன், பொறுமையாக செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது. ஆனால், புலிகள் தாக்குதல்களைத் தொடர்கின்றனர். இதனை சர்வதேசத்துக்கு கூறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இணைத் தலைமை நாடுகள் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து விடுதலைப் புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளைக் கண்டிப்பதுடன் அவர்களை ஒடுக்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# சிப்பாய் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை - ஓட்டமாவடியில் இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்று முன்தினம் பிற்பகல் 1.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்தார்.



# திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவ

# புதிய சித்திரத்தே

# விழா சிற

## யாழ்ப்பாணம் - திருநெல்வேலி அருள்மிகு அரசடி

## ஸ்ரீ சிவகாமசுந்தரி ஆலய வரலாறு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மிகத் தொன்மை வாய்ந்த கிராமங்களுள் திருநெல்வேலியும் ஒன்று. மிகப் பழங்காலத்தில் இருந்தே இந்தப் பகுதியில் சைவமும், தமிழும் செழித்து வளர்ந்து வந்துள்ளது. சைவத்தையும், தமிழையும் பேணிவளர்த்துப் ப துகாத்த பலர் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் தாய்வழி மூதாதையரான ஞானப்பிரகாச முனிவர் திருநெல்வேலிக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்திலே புகழ்பெற்று விளங்கிய சைவாசிரிய கலாசாலையும் திருநெல்வேலியிலேயே அமைந்திருந்தது.

சைவச் சிறார்களுக்கு உண்டியும், உறையுளும், கல்வியும் வழங்கும் சைவவித்தியாவிருத்திச் சங்கமும் இந்தக் கிராமத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

சைவமும் தமிழும் செழித்து வளரும் இந்தப் பகுதியிலே பல சைவ ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் அரசடி ஸ்ரீ சிவாமசுந்தரி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும்.

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கிக் கல்வியங்காடு செல்லும் வீதியிலே ஆண்டிப்புலம் என்ற தோம்புப் பெயர்கொண்ட காணியிலே அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம் அமைந்திருக்கின்றது.

இந்த ஆலயத்தின் தலவிருட்சமாக மிக மிகத் தொன்மை வாய்ந்த அரச விருட்சம் உள்ளது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குரியதாக இந்த விருட்சம் இருக்கலாம் எனக் கணிப்பிடப் படுகின்றது. இந்த ஆலயத்தின் மூர்த்திகரத்துக்கும், அருளாட்சிச் சிறப்புக்கும் இந்த அரச மரமும் அதனோடு பின்னிப் பிணைந்து வளர்ந்திருக்கும் வேப்பமரமும் பிரதான காரணமாகலாம். அரசும், வேம்பும் சக்தியும் சிவனும் என்று எமது சமயம் கூறுகிறது. அரசும் வேம்பும் இணைந்து இருப்பது அர்த்தநாரீச்சுரரின் தோற்றம் என்று சைவ அறிஞர்கள் கூறுகின்றனர். சிதம்பரத்திலேயும் அரசும் வேம்பும் இணைந்து வளர்ந்திருப்பதையும் இதனை அர்த்தநாரீச்சுரர் என அடியார்கள் வழிபடுவதையும் இன்றும் காணலாம்.

இந்த ஆலயத்தின் தோற்றம் தொன்மை பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள ஆலயப் பதிவேட்டின் இரண்டாம் பக்கத்திலே இந்த ஆலயம் பற்றிய குறிப்பு உண்டு. 1844 ஆம் ஆண்டுப் பதிவுப்படி "ஓடுபோட்டு வேயப்பட்ட கூரையுடையதென்றும், தினமும் ஒரு நேரப் பூசையுடைய தென்றும் அறியமுடிகின்றது. மேலும் இந்த ஆலயத்தின் முகாமையாளராகக் குமாரவேலு சண்முகம் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெய்வீகத் தன்மையும் திருவருட் சிறப்பும் பொருந்திய இந்த ஆலயத்தோடு தொடர்புடைய பல அற்புதங்களை இந்த ஊர் மக்கள் செவி வழியாகக் கூறிவருகின்றனர்.

இந்த ஆலயத்துக்கு அம்பாள் அடியார்கள் பலர் காணிகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர். இங்கு 1951 ஆம் ஆண்டு தொடக்கம் கொடியேற்றப்பட்டுத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயம் 1969 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டுப் புதிய திருப்பணி வேலைகள் நிறைவாகி 1971 ஆம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் இந்த ஆலயம் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. அடியார்களின் ஒத்துழைப்புடன் சேதங்கள் திருத்தப்பட்டன.

1988 ஆம் ஆண்டு தேர்த்திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டுப் பதினைந்து லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டு இந்தச் சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1995 ஆம் ஆண்டு சூரியப்பிரகாச இராணுவ நடவடிக்கையினால் இந்தச் சித்திரத்தேர் முற்றாக எரிந்து சாம்பராகியது. அத்துடன் ஆலயத்தின் முற்பகுதி உட்பட சுற்றுப் பிரகாரமும் பலத்த சேதத்துக்கு உள்ளாகியது.

1996 ஆம் ஆண்டு யூன்மாதம் 4 ஆம் திகதி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. அடியார்களின் பொருளுதவியுடன் ஆலயப் பரிபாலன சபையினரால் இந்த ஆல யம் புனரமைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மகோற்சவமும் ஏனைய உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தினமும் மூன்று நேரப் பூசை நடைபெறும் இந்த ஆலயத்திலே தொடர்ந்தும் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளின் திருவருட் கடாட்சத்தாலும், அடியார்களின் உதவியினாலும் இன்று மீண்டும் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேரேறி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் திருவருள் கைகூடியுள்ளது. எல்லாம்வல்ல அம்பாளின் திருவருட்கடாட்சம் எல்லோர்க்கும் கிடைப்பதாக.

## வாழ்த்துச் செய்தி

### சிற்பாசாரியார் திரு. ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஷ்



திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் எழுந்தருளி அருள்பாலிக்கவென எமது ஆறுமுகம் சிற்பாலயத்தால் நிர்மாணிக்கப்பட்ட எண்கோணச் சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா இன்று சிறப்புற நடைபெறுகின்றது.

எமது தந்தையார் அமரர் கலாபூஷணம், தேர்க்கலை அரசு, திரு.ஜீவரத்தினம் அவர்கள் சிற்பசாஸ்திர விதிகளையும், நுட்பங்களையும் நன்கு அறிந்து அவற்றைக் கால, சமூகமாற்றம் என்பவற்றுக்கு இயைபுபடக் கற்பனை வளத்துடன் தனக்கெனத் தனியானதொரு பாணியை உருவாக்கியமையை, இன்று ஈழத்திலே பவனிவரும் அவரது கைவண்ணத்தில் உருவான சித்திரத் தேர்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆறுமுகம் சிற்பாலயத்துக்கெனத் தனித்துவமானதோர் பாணியை உருவாக்கிய எமது தந்தையாரின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி, அவரது நெறிப்படுத்தலிலே வளர்ந்த அடியேன் இன்று இந்தச் சித்திரத்தேரை நிர்மாணித்துள்ளேன்.

எல்லாம்வல்ல அம்பிகையின் திருவருளும், எமது சிற்பாலயக் குழுவினரின் கூட்டு முயற்சியும் சிறப்பாக எமது சிறிய தந்தையர்களான திரு. ஆ.துரைராசா, ஆ.சிவலிங்கம் ஆகியோரின் உளமார்ந்த ஒத்துழைப்பும் என்னை இந்தத் தெய்வீகப் பணியிலே சிறப்பாக ஈடுபடுத்தின.

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் இந்தத் தேரிலே பவனிவந்து அடியார்களுக்கும், திருநெல்வேலிப் பதிக்கும் எல்லா நன்மைகளையும் அருளவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

## அம்பாள் அடியார்களே!

நிகழும் மங்கள்கரமான விய வருடம்
(10.05.2006) புதன்கிழமை பகல் 2.00 ம
நவராத்திரி நாயகியாகவும், நவசக்தி நாயகிய
விளங்கும் அம்பாளுக்கென அம்பாள் அடியா

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்ப
"சிற்பச் சக்கரவர்த்தி", "சிற்பகலா
"தேர்க்கலைஅ
ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் அ
"சிற்பப்பிரகாசம்" ஜீவரட்ண
சகோதரர் ஆறுமுகம், சிவலிங்கம்
கைவண்ணத்

### எண்கோணத்தில்
### புதிய சித்திரத்தேர் வெ
### நடைபெறத் திருவருள்

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம்
ஆசியுரை:- சிவஸ்ரீ வை
வாழ்த்துரை:- பேராசிரியர்,
செஞ்சொற்செ
ஆகியோர்.
நன்றியுரை: - ஆலய நிர்வா

## ஆசியுரை

### சதா.ராஜாஜி குரு


அபிராமி அந்தாதி

கொடியே இளவஞ்சிக் கொம்பே
எனக்குவ்வவே பழுத்த படியே
மறையின் பரிமளமே
பனிமாலி மயப்பிடியே
பிரமன் முதலாய தேவரைப்
பெற்ற வம்மே அடியேன்
கிறந்திங்கினிப் பிறவாமல்
வந்தாண்டு கொள்ளே.

அம்பலக்கூத்தனுடன் தனித்து நின்றாட திருநெல்வேலியம் பதியில் கோவில்கொண்டு அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் சிவகாமி அம்பாளுக்கு, திருவருள் துணையுடன் சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும் இத்தினத்தில் -

காரிருள் சூழ்ந்த யுத்தமேகம் அகன்று, நாட்டில் சமாதானமும், சாந்தியும் நிரந்தரமாக அமையவும் சிற்பகலாவல்லுநர் ஜீவரத்தினம், நினைவு அகலா சித்திரத்தேர் சமைத்தோர் திருப்பணிக்கு உதவியோர், அடியவர்கள் யாவரும் எல்லா நலன்களும் பெற்று இன்புற்றுவாழ அம்பிகையின் பாதங்களை வணங்கி ஆசிகள் பெற வாழ்த்துகிறேன்.

# சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய
# தேர் வெள்ளோட்ட
# சிறப்பிதழ்



ர்களே!

விய வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள் பகல் 2.00 மணியளவில், நவ நாயகியாகவும், வசக்தி நாயகியாகவும், ஸ்ரீ சக்கர நாயகியாகவும் அம்பாள் அடியார்களின் பெருமுயற்சியால் -

றுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த ", "சிற்பகலாமணி" கலாபூஷணம், தேர்க்கலைஅரசு", ஜீவரட்ணம் ஆசாரியாரின் புதல்வன் ம்" ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் ம், சிவலிங்கம் மற்றும் குழுவினரின் கைவண்ணத்தில்

**ாணத்தில் அமைந்த**
**ந்தேர் வெள்ளோட்ட விழா**
**திருவருள் பாலித்துள்ளது.**

ம்

சிவஸ்ரீ வை.ஜெகதீஸ்வரக்குருக்கள்
பேராசிரியர்,கலாநிதி இ.சிவலிங்கராசா,
செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
ஆகியோர்.
ஆலய நிர்வாகத்தினர்

**ஆலய பரிபாலன சபை**

## வாழ்த்துச் செய்தி

### பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மனுக்குப் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று வெள் ளோட்ட விழா பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

கைபுனைந்தியற்றிய கவின்பெறு வனப்புடைய இந்தச் சித்திரத் தேரினை ஆறுமுகம் சிற்பாலய அதிபர் திரு.ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஷ் அவர்களும் அவரது குழுவினரும் நிர்மாணித்துள்ளனர்.

ஈழத்துச் சித்திரத்தேர் வரலாற்றிலே அழியாத இடத்தைப் பெற்றிருக்கும் ஆறுமுகம் சிற்பாலயத்தின் மகத்தான பணி என்றும் போற்றிப் பாராட்டத்தக்கது.

இந்தச் சித்திரத்தேரை வடிவமைத்த சிற்பி ஜெயப்பிரகாஷின் தந்தையார் ஆறுமுகம் ஜீவரத்திணம் ஈழத்தின் பல பாகங்களிலும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட தேர்களை நிர்மாணித்துப் பெரும்புகழ் பெற்றவர். அவரது வழிகாட்டலிலே வளர்ந்த அவரது மகன் ஜெயப்பிரகாஷ் மிக அற்புதமான வேலைப்பாடுகளுடன் இந்தச் சித்திரத் தேரினை நிர்மாணித்துள்ளார்.

வாழையடி வாழையாக வந்த சிற்பக்கலைப் பரம்பரையிலே உதித்த ஜெயப்பிரகாஷ் இன்று மிகச்சிறந்த ஸ்தபதியாக விளங்குகின்றார். ஆறுமுகம் சிற்பாலயத்தின் தேர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்திலே தனித் தன்மையும் சிறப்பமிசங்களும் கொண்டவையாக இருப்பதை அத்தேர்களைத் தரிசித்தோர் நன்கு அறிவர். சிற்பசாஸ்திர விதிகளை அனுசரிக்கின்ற அதேவேளையில், ஆக்கத்திறனும் கற்பனை வளமும் இவர்களின் தேர்களிலே செறிந்திருப்பதை அவதானிக்கலாம்.

அரசடிஅம்மன் என அடியார்களால் வாய்நிறையத் துதிக்கப்படும் சிவகாமசுந்தரி இந்தச் சித்திரத் தேரிலே பவனிவந்து எமக்கெல்லாம் திருவருளைப் பாலிக்கப் பிரார்த்திக்கின்றேன். ஸ்தபதி ஜெயப்பிரகாஷின் கைவண்ணத்திலே உருவான இந்தச் சித்திரத்தேரினை உவந்தேற்கும் அரசடி அம்மன், அவரின் பணிகள் சிறக்கத் திருவருள் பாலிப்பாராக.

**சுபம்!**

## ஆசியுரை

### நல்லை இரண்டாவது குருமகாசந்நிதானம்
### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த சுவாமிகள்



திருநெல்வேலி அருள்மிகு அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கு சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட விழா நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருநெல்வேலியிலே சைவமும், தமிழும் மிகப் பழங்காலத்திலிருந்தே செழித்து வளர்வதைச் சைவ உலகம் நன்கு அறியும். "பசு வதைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர்'' என்று சைவத் தமிழ் அறிஞரான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடும் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் திருநெல்வேலிப் பதியைச் சேர்ந்தவரே.

இத்தகைய சிறப்புமிக்க பதியிலே எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கின்ற ஸ்ரீ சிவகாம சுந்தரிக்கு ஆறுமுகம் சிற்பாலய ததி னர் அழகிய சித்திரத் தேரினை நிர்மாணித்துள்ளனர்.

ஈழத்துச் சித்திரத்தேர் நிர்மாணிகளிலே ஆறுமுகம் சிற்பாலயத்தின் சிற்பிகள் முன்னணியிலே திகழ்பவர்கள். கலாபூஷணம் அமரர் ஆ.ஜீவரத்தினம் அவர்கள் நிர்மாணித்த தேர்கள் ஒவ்வொன்றும் தனித் தன்மையும், சிறப்பும் மிக்கவை. நூற்றுக்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை நிர்மாணித்த அமரர் ஆ.ஜீவரத்தினம் அவர்களின் மூத்த புதல்வன் ஜெயப்பிரகாஷ் அவர்கள் தந்தையாரின் வழிகாட்டலில் சிற்பக் கலையைப் பயின்றவர். அற்புதமான சிற்பக் கலைஞராக இன்று திகழ்கின்ற திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களின் பணி சீருடனும், சிறப்புடனும் தொடரவேண்டுமென்று எல்லாம் வல்ல அம்பிகையின் திருவடிகளைத் துதிக்கின்றேன்.

எமது ஆதீனத்தோடு மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்த அமரர் ஆ.ஜீவரத்தினத்தின் புதல்வரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். தந்தையின் வழியிலே மைந்தரும் தொடர்ந்து பணிபுரிக.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு.**
**2 ஆவது குருமகா சந்நிதானம்.**


ரு

காம்பே
டியே
ப்

தனித்து
பதியில்
களுக்கு
அம்பா
டன் சித்
நடை
மேகம்
னமும்,
மயவும்
த்தினம்,
சமைத்
யோர்,
ா நலன்
ழ அம்பி
ணங்கி
ன்.


## விழா சிறப்புற வாழ்த்தும் வர்த்தகர்கள்

- **தாஸ் ஸ்ரோர்ஸ்** — கலாசாலை வீதி திருநெல்வேலி
- **சூரியா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்** — கலாசாலை வீதி திருநெல்வேலி
- **ஹரன் புடைவையகம்** — பலாலி வீதி திருநெல்வேலி
- **ஒளி அழகன் ஸ்ருடியோ** — ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
- **தனலக்சுமி புத்தகசாலை** — கலாசாலை வீதி திருநெல்வேலி
- **ராம் கரன் புத்தகசாலை** — பலாலி வீதி திருநெல்வேலி
- **ஐங்கரன் களஞ்சியம்** — பலாலி வீதி திருநெல்வேலி
- **குமரன் ஸ்ரோர்ஸ்** — பலாலி வீதி திருநெல்வேலி
- **வேல்முருகன் கபே** — பலாலி வீதி திருநெல்வேலி
- **துர்க்கா ரேடர்ஸ்** — பலாலி வீதி திருநெல்வேலி
- **கஜன் குறூப்** — 76 B ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
- **நாதன் புடைவையகம்** — அடியபாதம் வீதி திருநெல்வேலி
- **சுதர்சன் மருந்தகம்** — இராமநாதன் வீதி திருநெல்வேலி
- **ஆறுமுகம் விலாஸ் தேனீர்ச்சாலை** — ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
- **வராகி வைத்தியசாலை** — அம்மன் வீதி திருநெல்வேலி
- **செல்வா எலக்ரிக்கல்ஸ்** — 68 பலாலி வீதி திருநெல்வேலி
- **ஏசியன் புடைவையகம்** — 24 பலாலி வீதி திருநெல்வேலி
- **கிறீன் பலஸ் எம்போரியம்** — 43 பலாலி வீதி திருநெல்வேலி
- **ஜீவா பூட் ஸ்ரவ் சப்ளையர்** — 43/4 பலாலி வீதி திருநெல்வேலி
- **பிரகாந்த் போட்டோக் கொப்பி அன் கொமினிக்கேசன் ஸ்ரோர்ஸ்** — 56 B வீதி திருநெல்வேலி
- **கஜனி ஸ்ரோர்ஸ்** — அம்மன் வீதி திருநெல்வேலி
- **ரஸ்மி சவுண்ட் சேவிஸ்** — இராமலிங்கம் வீதி முடமாவடி
- **குமார் சவுண்ட் சேவிஸ்** — சட்டநாதர் வீதி, கொண்டலடி, வைரவர் கோயிலடி (தேர்மடம்)
- **சாயி கணேசா ரேட்ஸ்** — ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
- **நியூதேவி சலூன்** — ஆடியபாதம் வீதி திருநெல்வேலி
- **கனகா பத்திரிகை விற்பனை நிலையம்** — 06 பலாலி வீதி திருநெல்வேலி
- **சிவகாமி ரேடேஸ்** — ஆடியபாதம் வீதி திருநெல்வேலி



புலிகளின் குரல் வானொலியின் 'அரசியல் அரங்கம்' நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்திய உரை

# சிங்களத்துக்கு உலகம் கொடுத்த ஆதரவை முறியடிக்க பரப்புரைப் போரை தொடங்குங்கள்

பரப்புரைப் போரினூடாக சிங்களத்துக்கு இதுவரை உலகம் கொடுத்த ஆதரவை முற்றாக இழக்கச் செய்வதற்கான பணிகளில் புலம்பெயர் வாழ் தமிழர்கள் ஈடுபட வேண்டிய காலம் வந்துவிட்டது.

புதைகுழிகளும், படுகொலைகளும் எழுதும் வரலாறு பற்றி இந்த முறையும் பேசுகிறோம்.

உலகம் முழுவதும் ஆக்கிரமிப்பாளர்கள் செய்ததைப் போல அவர்கள் செய்ததை வரலாறுகள் கூறியது போல, பொதுமக்களைக் கொல்வதன் ஊடாகத் தாங்கள் பெறுகின்ற மகிழ்ச்சியை தங்களுடைய தூக்குத் தண்டனையாக மக்கள் மேல் விதிக்கும் அந்த படுபயங்கரமான மோசமான தண்டனை முறைமையைத் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு மீண்டும் கட்டவிழ்த்துவிட்டுள்ள வரலாற்றை மீண்டும் கூறுகிறோம்.

கடந்த வாரம் உதயன் பணிமனைக்குள் சென்று ரஞ்சித் மற்றும் சுரேஸ் என்ற இரு இளைஞர்களைப் படுகொலை செய்தனர்.

அவர்களுடைய சடலங்கள் புதைக்கப்பட்ட ஒரு சில மணிநேர ங்களிலேயே மீண்டும் துப்பாக்கிச் சூட்டில் 7 இளைஞர்கள் பலி என்ற செய்தியைக் கேட்கிறோம்.



மணியம் சுபாஸ் (வயது 19), நவரத்தினராசா நரசன்னா (வயது 19), தாமோதரம் பிள்ளை மஞ்சு (வயது 17), பாலச்சந் திரன் கிரிசாந்தன் (வயது 18), நாகரட்ணம் நகுலேஸ்வரன் (வயது 18), கோவில்மணி சின்னமணி (வயது 21), சுமன் (வயது 22) என்று அந்தச் செய்தி நீள்கிறது.

எங்கள் மக்கள் மீது தூக்குத் தண்டனை விதிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் மகிந்தவின் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இப்போது ஒரு மிகப்பெரிய கதவு திறந்துள்ளது.

புலம்பெயர் வாழ்க்கை வாழும் எமது உறவுகள் - மக்கள் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டிய கால கட்டம் வந்து விட்டது. அது குறித்து பேசுவதற்கு முன்னர் சில விடயங்களைப் பார்க்கலாம்.

உலகம் இப்போது பெரும் நெருக்கடியில் நிற்கிறது. ஒரு பொழுதும் எதிர்பார்க்காத ஒரு நெருக்கடியை குட்டித் தீவான இலங்கை அதுவும் குட்டித் தாயகமான எங்கள் தாயகத்தில் தொடர்புபடுத்திக் கொண்ட சர்வதேசம் இன்று குழம்பி நிற்கிறது.

ஒரு முறை பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "மீறப்படுவன எவரது உரிமைகள் என்பதும், மீறுவோர் எவர் என்பதுமே - மீறப்படுபவை மனித உரிமைகளா என்பதை உலகம் தீர்மானிக்கும்" என்றார்.

புதையுங்கள்....

இன்னும் புதையுங்கள்...

ஆழக்கிடங்கெடுத்து அத்தனையையும் புதையுங்கள்...

ஆனால், வானம் பொழிகின்ற பூமி விளைகின்ற வளமான ஒருநாளில் எங்கள் வரலாற்றைப் புதைகுழிகள் எழுதும்"

என்று இன்று நாங்கள் கூறுகிறோம்.

மனித குல வரலாற்றைப் படுகொலைகளும், புதைகுழிகளும் தான் எழுதி நகர்த்தியுள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால் ஹிட்லருடைய 60 லட்சம் யூத மக்கள் படுகொலை - தீமோரில் நடந்த பல லட்சம் படுகொலை - பொஸ்னியாவில் கொத்துக் கொத்தான முஸ்லிம் மக்கள் படுகொலை - ருவாண்டாவில் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் படுகொலை - சூடானின் டர்பூர் மாவட்டத்தில் பட்டப்பகலில் இப்போது நடைபெறும் படுகொலைகள் இவற்றைவிட இலங்கையில் நடக்கும் படுகொலைகள் என்ற புதிய வரலாற்றை நாங்கள் எழுத வேண்டியுள்ளது.

உலகத்தை உலுக்கிய வரலாற்று நிகழ்வு ஒன்றை நினைவூட்டுகிறோம்.

1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி தென்வியட்நாமின் மைலாயில் நடைபெற்ற படுகொலையானது - உச்சக்கட்டமான ஒரு படுகொலை.

400 வியட்நாமியப் பொதுமக்கள் வெட்டப்பட்டும், கொல்லப்பட்டதுமான அந்தசட சம்பவத்தின் போது, முற்றாக அந்தக் கிராமம் எரித்து அழிக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் செய்மூர் கேஸ் என்ற ஊடகவியலாளர் இது தொடர்பான தகவல்களைத் திரட்டி, உலகத்துக்கு முன்வைத்தார். அப்போது உலகம் முழுவதிலும் துக்கமான, குழப்பமான, அதிர்ச்சியான சூழ்நிலை உருவானது. அதையடுத்து மைலாய் படுகொலை விசாரணைகள் நடத்தப்பட்டு, தொடர்புடையவர்கள் தண்டிக்கப் பட்டனர்.

இந்தப் படுகொலையை நடத்திய படையணிக்குத் தலைமை தாங்கிய லெப்.வில்லியம்ஸ் கலி என்பவர் தனது இறுதிக் காலத்தில் மனம் கலங்கிப் பேதலித்து உளறிய வார்த்தைகளும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன.

அதுபோலவே, வியட்நாம் போரின் உச்சக்கட்டத்தில் அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் றொபோட் மக்னமாரா. 1961 ஆம் ஆண்டுக்கும் 1968 ஆம் ஆண்டுக்கும் இடையே அவர் நீண்டகாலம் அந்தப் பதவியை வகித்தார். விமானக் குண்டுகளை வீச உத்தரவிட்ட பெரிய மனிதர் இவர். காலையில் விமானக் குண்டு வீச்சுக்களைத் தொடங்கி, மாலையிலே வியட்நாமியப் போராளிகளைக் கொன்றுவிட்டதாகப் பொய் கூறி அதிர்ச்சியூட்டிய மனிதர். அவர் பதவிக் காலம் பெப்ரவரி 1968 ஆம் ஆண்டு முடிவடைந்தது. அவருக்கு அளிக்கப்பட்ட பிரியா விடையின் போது முற்றாக அவர் உடைந்து போனார். கண்களில் நீர்மல்க, தழுதழுத்த குரலில் தான் செய்த பாவச் செயலுக்காகப் பாவமன்னிப்பு கோரினார்.

இரண்டாம் உலகப் போரில் ஐரோப்பாவில் வீசப்பட்ட குண்டுகளைவிட அதிகளவிலான குண்டுகளை வியட்நாமில் வீச, தான் உத்தரவிட்டதைக் கூறி, மனம் பேதலித்துப் பேசினார். அதன் பின்னர் நீண்டகாலம் மௌனமாக இருந்தவர் - 1995 ஆம் ஆண்டு திரும்பிப் பார்க்கிறேன் என்ற நூலை எழுதினார்.

தற்போது படுக்கையில் கிடக்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இந்த எண்ணங்கள் மனதிலே ஓடக் கூடும் எனில், நாம் முன்னைய வரலாறுகளோடு அதை இணைத்துப் பார்க்கக் கூடும்.

வரலாற்றின் அடிப்படையில் கொலைகள் மற்றும் படுகொலைகள் என்பன எதிர்பார்த்த இலக்கை அடைய ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி செய்யவில்லை. அதற்கு எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இதனை இலங்கை அரசாங்கம் அறியாமல் இருப்பது குறித்து நாம் எதனையும் சொல்ல விரும்பவில்லை.

இனித் தமிழீழத் தாயகத்தில் நடைபெற்ற படுகொலைகள் பற்றிய தகவல்களைத் தர விரும்புகிறோம்.



வடக்கு - கிழக்கு தகவல் புள்ளிவிபர மையம் வெளியிட்டுள்ள தகவல் திரட்டில் இந்தப் படுகொலை விபரங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

140 இற்கும் மேற்பட்ட கொத்துக் கொத்தான எங்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. 20, 30,40,100, 250, 300 என்ற தொகைகளின் அடிப்படையிலும், ஊரின் பெயரிலுமாக எங்கள் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

வரலாற்றில் பதியப்பட்ட படுகொலையாக 1956 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் இங்கினியாகலையில் கரும்புத் தோட்டத்தில் வேலை பார்த்த தமிழ் மக்களைச் சிங்களத் தொழிலாளர்கள் கூரிய கத்திகளால் துண்டு துண்டாக வெட்டி, எரித்த சம்பவத்தோடு எங்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் தொடங்கின.

1958 ஆம் ஆண்டு மே இறுதி மற்றும் ஜுன் மாதங்களில் 300 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். குறிப்பாக பாணந்துறை கதிர்வேலாயுதர் கோவிலில் எங்களுடைய அர்ச்சகர் - தார் ஊற்றி எரிக்கப்பட்டார்.

தார்சி வித்தாச்சி என்பவர் எமர்ஜென்சி 58 என்ற நூலில் இந்தப் படுகொலை விபரங்களைத் தந்துள்ளார். 1958 ஆம் ஆண்டு படுகொலையின் போது - பண்டாரநாயக்க கூறிய வார்த்தைகளை இன்று நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

"தங்களுடைய சதைத் துண்டங்களைத் தாங்களே ருசி பார்க்கட்டும் - தங்களுடைய குருதி வழிவதைத் தாங்களே கண்ணால் பார்க்கட்டும்" என்று "அழகாக ரசித்து" அவர் கூறியதும் அதன் பின்னர் ஒரு வருடத்திலேயே அவர் கொல்லப்பட்டதும் வரலாறு. அவரை யார் கொன்றார்கள் என்பது உலகத்துக்குத் தெரிந்த விடயம். நிச்சயமாக நாங்கள் இல்லை. அதனையும் எம்மீது போட்டிருப்பார்கள். இன்று அதேபோல அதே துண்டுடன், அதே சிரிப்புடன் இதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார் மகிந்த ராஜபக்ஷ.

1977 ஆம் ஆண்டுக் கலவரத்தில் 1500 இற்கும் மேற்பட்ட தமிழர்களும் - 1983 ஆம் ஆண்டு வன்முறையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களும் கொல்லப்பட்னர்.

04.12.1984 இல் மன்னாரில் படையினரது வெறியாட்டத்தால் 200இற்கும் மேற்பட்ட மக்களும் -31.01.1985 இல் மன்னாரில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

உலகத்தை இன்றும் உலுக்கும் 1987ஆம் ஆண்டு ஜனவரி மாத முடிவில் கொக்கட்டிச்சோலையில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி சத்துருகொண்டானிலிருந்து புறப்பட்ட இலங்கை இராணுவத்தினர் - வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் அடைக்கலம் புகுந்த மக்களை வாகனத்தில் ஏற்றி 226 பேரைச் சுட்டுப்படுகொலை செய்தது. அவர்களது பெயர்களை நாம் பதிவு செய்து வைத்துள்ளோம்.

1995ஆம் ஆண்டில் ஜுலை 9 ஆம் திகதி யாழ். நவாலி தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானப் படையின் வெறியாட்டம். மிகக்குறுகிய நேரத்தில் மிகப் பெரியளவில் எங்கள் மக்கள் பலியெடுக்கப்பட்டனர். 155 இற்கும் மேற்பட்ட குழந்தைகளும், பொதுமக்களும் உடல் சிதறி துண்டு துண்டாகக் கிடந்த படங்கள் - இன்றைக்கும் அதிர்வூட்டக் கூடியவை.

இத்தகைய படுகொலைகளினூடாக எங்களது வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தப் படுகொலைகள் எல்லாம் இலங்கை இராணுவத்தினர் குறிப்பிட்ட கால அவகாசத்தை மேற்கொண்டு, சாவகாசமாக செய்யப்பட்டவை.

இப்போது புலம்பெயர் மக்களுக்கான செய்தியை நாம் தெரிவிக்கின்றோம்.

புலம்பெயர் வாழ்க்கை வாழும் மக்கள் எதற்கு அங்கு வாழ்கிறோம் என்று ஏங்கிக் கொண்டிருந்தனர்.

[illegible]ளுக்கு ஒரு காலம் வரும் - [illegible] முற்றுப்பெறுவதற்கான கடைசிப் பணியை நீங்கள் செய்ய வேண்டும்" என்று கூறியிருந்தோம்.

எந்த இடத்தில் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் வாழ்ந்தாலும் சரி - கூடும் இடங்களில் அது பேரூந்து அல்லது ரயில் நிலையங்கள், பணிமனைகள், உணவகங்கள் என்று எந்த இடமாக இருந்தாலும், இந்தப் படுகொலைகளின் நினைவுகளைக் கொண்டு அந்த மக்களிடத்தில் அதிர்வையூட்டி, அந்த அரசுகளில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும்.

எங்கள் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகளானது - உலகத்தில் இதுவரை செய்யப்பட்ட படுகொலைகளுக்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல.

21 ஆம் நூற்றாண்டிலும் கூட இந்தப் பகுதியில் நாளாந்தம் நடத்தப்படும் சம்பவங்கள் தொடர்பாகத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் புலம் பெயர் நாடுகளில் மிகப் பெரிய பரப்புரையை - உலகின் மனசாட்சியை உலுக்கும் வகையில் மேற்கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது.

இரண்டாம் உலகப் போரின் படுகொலைகளைப் பிக்காசோ ஓவியத்துக்கூடாக எப்படி வெளிப்படுத்தி உலகத்தை உலுக்கினாரோ -

அதைப் போல தமிழ் மக்களது படுகொலைகளை ஒழுங்குபடுத்தி, ஒரு ஓவியமாக வரைந்து வைக்கலாம் - புகைப்படங்களாக வைக்கலாம்.

புகைப்படக் கண்காட்சிகளை வீதியோரங்களில் நடத்தி, மக்களின் மனதை ஈர்க்கலாம்.

இந்தப் புகைப்படங்களுடன் மெழுகுவர்த்திகளைத் தாங்கி ஊர்வலமாகச் சென்று, உலக மக்களது மனசாட்சியை உலுப்பலாம்.

இத்தகைய புதிய முறைகளில் புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் - தாங்கள் வாழும் நாடுகளை நமக்குச் சாதகமாக்கி திசை திருப்ப முடியும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து முடிவெடுக்க வேண்டிய அவசியம் இன்றைக்கு உலகத்துக்கு வந்துள்ளது. இப்போதைய சூழல் மிக மிக சாதகமான சூழல். இது நீண்டகாலத்துக்கு நீடிக்காது என்பதையும் நினைவில் நாம் கொள்ளவேண்டும்.

சிங்களப் பேரினவாதியாக மாறிவிட்ட புத்திஜீவி என்று சொல்லப்படும் மகிந்தவின் ஆலோசகராகிய தயான் ஜயதிலக்க -அண்மையிலே ஒரு கட்டுரையில் சிங்கள தேசம் என்ன செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

"ஆயிரம் வெட்டுக்களால் ஒரு படுகொலை" என்ற தலைப்பில் -

"இன்று புலிகளுக்கு எதிராக நாங்கள் செய்யும் எதிர்த்தாக்குதல்கள் - நிச்சயமாகத் தமிழ் மக்களை வதைக்கக் கூடாது, அவர்கள் மீது கொலைகளை நிகழ்த்தக் கூடாது. அவ்வாறு நிகழ்த்தினால் எங்களுடைய நோக்கம் திசைமாறிவிடும். உலகம் ஒரு பொழுதும் எங்களுக்கு ஆதரவாகச் செயற்படாது. அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக உலகம் திரும்பிவிடும் என்ற அபாயம் உள்ளது" என்கிறார்.

ஆகவே, தமிழ் பேசும் மக்களுக்கு தற்போது நல்ல வாய்ப்பு உருவாகியுள்ளது.

அவரது கட்டுரையின் கடைசிப்பகுதியில் புலிகளுக்கு எதிரான பயங்கரவாத எதிர்ப்புப் போரைத் தவறுதலாகச் சிங்களம் கையாண்டால் என்ன நடக்கும் என்பதைப் பற்றி மிகத் தெளிவாகச் சொல்லுகிறார்.

"நாங்கள் இந்தச் சண்டையை பிடிக்கும் போது அது வழிதவறி - ஒரு இனக்குழுமத்தின் மீதான - ஒரு மதம் சார்ந்த - பேரினவாத அடிப்படையிலான ஒரு கருத்தை உருவாக்கக் கூடிய - இனத்தின் மீதான போராக இதை நாங்கள் மாற்றினால், நிச்சயமாக நாங்கள் எங்கள் தார்மீக ஆதரவுக்கான தளத்தை முற்றாக இழந்துவிடுவோம்- உலக அபிப்பிராயத்தை இழந்துவிடுவோம் - பிரதேச ரீதியான (இந்தியா) ஆதரவை இழந்துவிடுவோம் அது மட்டுல்ல இறுதியில் போரையே இழந்து விடுவோம்" என்கிறார்.

சிங்களம் போரை இழப்பதற்கான அனைத்துப் பணிகளிலும் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

நாங்கள் அவர்களுடன் நேரடியாக மோதி, அவர்களது போரை இழக்க வைக்கப் போகிறோம். அதேநேரத்தில் எங்கள் புலம்பெயர் மக்கள் பரப்புரைப் போரினூடாக சிங்களத்துக்கு இதுவரை உலகம் கொடுத்த ஆதரவை முற்றாக இழக்கச் செய்வதற்கான பணிகளில் ஈடுபட வேண்டிய காலம் வந்து விட்டது. ✪

நமது ஈழநாடு

சிந்தனைக்கு....
எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

திருக்குறள்

## நமது நோக்கு

# சர்வதேச அழுத்தமே வழி!

இன்னமும் திகதி உறுதிப்படுத்தப்படாத இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுக்களுக்கு அனைத்துமே தயார் என்பது போல, அரசாங்கம் வெளியுலகில் பிரசாரம் செய்துகொண்டு, உள்நாட்டில் அதற்கு எதிர்மாறான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுக்கள் நடைபெறுமா என்பது இந்த நிமிடம் வரை உறுதியாக வில்லை. ஆனால், அரசு ஏற்கனவே மே 10 இல் பேச்சு நடக்கும் என்று ஒரு தலைப்பட்சமாக ஒரு செய்தியை கசிய விட்டிருக்கிறது.

இன்று தான் இந்த மே 10. இப்போது இந்த மாத இறுதி, அடுத்த மாத தொடக்கம் என இந்தப் புரளி நீண்டு செல்கிறது. ஆனால், பேசத் தான் உகந்த சூழல் மட்டும் உருவாக்கப்படவில்லை.

இரண்டாம் கட்ட ஜெனிவாப் பேச்சுக்களில் புலிகள் பங்கேற்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் தருணம் இந்த நிமிடம் வரை ஏற்படுத்தப்படவில்லை. புலிகளின் கிழக்குத் தளபதிகள் தலைமைப் பீடத்துடன் ஆலோசனை நடத்துவதற்கான பயண ஒழுங்குகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை.

அடுத்தது தமிழர் தாயகப் பகுதிகளில் படுகொலைகள் நிறுத்தப்படவில்லை. அப்பாவிப் பொதுமக்கள் மீதான படுகொலைகள் நாளுக்கு நாள் தீவிரம் பெறுகின்றது.

ஒருவர், இருவராக ஆரம்பித்த படுகொலை இப்போது ஐந்து, ஏழு, எட்டு என்று பெரும் வேகம் கொண்டிருக்கிறது. இது ஒரு இனஅழிப்பு படுகொலையாகவே மாற்றம் கண்டிருக்கிறது.

தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பாக குடாநாட்டில் மிக மோசம்மடைந்துள்ள படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை.

புத்தூரில் 5 இளைஞர்கள், நெல்லியடியில் 7 இளைஞர்கள், மந்துவிலில் 8 இளைஞர்கள் என இந்தப் படுகொலைகள் நீண்டு செல்லும் போது, ஜெனிவாப் பேச்சுக்கள் எந்தவகையில் சாத்தியமாகும்.

ஜெனிவா முதற்கட்டப் பேச்சுக்களின் பிரதான அம்சமே படுகொலைகளை நிறுத்துவதாக இருந்தது. ஆனால், இன்று அந்தப் பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாடு முற்றாகவே தூக்கி வீசப்பட்டு, படுகொலைகள் தான் இப்போது வாடிக்கையாகி விட்டது.

இந்தச் சூழலில் இன்னொரு ஜெனிவாப் பேச்சுத் தேவையா? அதில் எட்டப்படும் இணக்கப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கு என்ன உறுதிப்பாடு இருக்கிறது.

இந்தச் சிக்கல்கள் ஜெனிவாப் பேச்சுக்குத் தடைகளைப் போட்டு நிற்கிறது. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படும் வரை ஜெனிவாப் பேச்சுக்கள் நடைபெறாது என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

இந்த வகையில் பார்க்கும் போது ஜெனிவாப் பேச்சுவார்த்தைக்கு இப்போது சந்தர்ப்பம் இல்லையென்று நிருபணமாகியிருக்கிறது. ஜெனிவாப் பேச்சுக்குத் தயார் என்று ஆயத்தத் திகதி குறித்து வரும் அரசு தான் அடுத்தகட்டமாக இதைச் சாத்தியப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் ஜெனிவாவில் நடக்குமா இல்லையா என்று ஆரூடம் கூறிக்கொண்டிருப்பதைவிட அதற்கான சாத்தியமான சூழலை உருவாக்குவது தான் அரசின் பொறுப்பாகும்.

சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது கொடுக்கக் கூடிய நிர்ப்பந்தம்தான் – இலங்கை அரசை சாதகமான முடிவெடுக்கும் நிலைக்குக் கொண்டுவரும்.

அப்பாவித் தமிழ் மக்களின் படுகொலைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்வதற்கான சூழலே இங்கு உருவாகியிருக்கிறது. ஏன், எதற்கு என்ற கேள்வி இல்லாமல் படுகொலை செய்யப்படுவது, கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போவது, வீதிகளில் பொதுமக்கள் அடித்துத் துன்புறுத்தப்படுவது என்பது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்த அராஜக நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இலங்கை அரசு மீது சர்வதேசம் கொடுக்கக்கூடிய அழுத்தம் தான் அடுத்த கட்ட ஜெனிவாப் பேச்சுக்களுக்குத் தமிழர் தரப்பைத் தயார்ப்படுத்தும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# பயங்கரவாதிகள் மீதான தாக்குதலே நடத்தப்படுகிறது என்கிறார் சோமவன்ச



கொழும்பு—

இலங்கையில் போர் நடைபெறவில்லை - பயங்கரவாதிகள் மீது தாக்குதல்தான் நடத்தப்படுகிறது என்று ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி ஆசாசியிடம் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க விளக்கியுள்ளார்.

கொழும்பில் ஜே.வி.பி தலைமையகத்தில் நடைபெற்ற ஆகாசியுடனான சந்திப்பின்போது சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளதாவது -

போரில் எங்களால் வெல்ல முடியாது என்று கூறுவதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி நீங்கள் கூறியிருப்பதன் மூலம் இராணுவத்தைப் பற்றி தவறாக மதிப்பிட்டுள்ளீர்கள். இது ஒரு ஜனநாயகநாடு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் உள்ளது.

நாங்கள் போரை நடத்தவில்லை. பயங்கரவாதிகள் மீது தாக்குதலையே நடத்துகிறோம். பயங்கரவாதிகளை நிச்சயம் தோற்கடிப்போம்.

இந்த நாட்டுக்குள் எந்த ஒரு அந்நியப் படையையும் அனுமதிக்க மாட்டோம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது இரு தனிநபர்களுக்கு இடையேயான கையெழுத்து. அதை நாம் ஏற்கமுடியாது.

சர்வதேச சமூகம் முன்வைக்கிற எந்த ஒரு யோசனையையும் ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை.

வடக்கு - கிழக்கு தவிர்த்து தான் 85 வீத தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அதிகாரப் பகிர்வின் மூலமாக ஒட்டுமொத்த தமிழினத்தின் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்று யாராவது உத்தரவாதம் அளிக்க முடியுமா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# ஐ.தே.க. தலைமையை விமர்சிக்கும் மகிந்த விஜேசேகரவிடம் விசாரணை

கொழும்பு—

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை விமர்சனம் செய்து வருவது குறித்து அந்தக் கட்சியின் விசாரணைக் குழுவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர விளக்கம் அளிக்க வேண்டும் என்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்று மகிந்த விஜேசேகர பகிரங்கமாக விமர்சனம் செய்து வருகிறார். அதனால் அவரது கட்சிப் பொறுப்புக்கள் பறிக்கப்பபட்டன. தொடர்ந்தும் ரணிலை மகிந்த விஜேசேகர விமர்சனம் செய்து வந்தார்.

இதையடுத்து மகிந்த விஜேசேகர மீது நடவடிக்கை எடுப்பதற்காக முன்னாள் அமைச்சர் ரூபா கருணாதிலக்க தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அந்தக் கட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. நாளை இந்தக் குழுவிடம் மகிந்த விஜேசேகர விளக்கம் அளிக்க வேண்டும் என்று தற்போது மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# 15 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களில் 15 ஆயிரம் வீடுகளை விசேட அடிப்படையில் நிர்மாணிக்கவுள்ளதாக மாகாண வீடமைப்புத் திட்டப்பணிப்பாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அமுல்படுத்தப்படும் வீடமைப்புத்திட்டங்களுக்கு மேலதிகமாக அமைக்கப்படவுள்ள இந்த வீடமைப்புத்திட்டம் உலக வங்கியின் அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்படுமெனவும் இதற்காக 3 கோடியே 75 லட்சத்தை உலகவங்கி ஒதுக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உயர்தர பரீட்சைக்கு தோற்றுபவர்களில்

# அடையாள அட்டை கிடைக்காதவர்கள் தொடர்பு கொள்ளுமாறு அறிவிப்பு!

கொழும்பு —

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்காதவர்கள் ஆட்பதிவு திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவென 50,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

கணிசமான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பித்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தற்போது அடையாள அட்டைகளை அனுப்பும் பணியில் ஆட்பதிவு திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

பாடசாலை மூலமாக விண்ணப்பித்தவர்கள் பாடசாலை அதிபர் மூலமாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள், கிராம சேவகர் மூலமாகவும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றுவரையில் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள். ஆட்பதிவு திணைக் களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளை தம்வசம் வைத்திருப்பதன் மூலம் பரீட்சை மண்டபத்தில் தேவையற்ற தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாகாணமட்ட போட்டிக்கான நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

திருகோணமலை—

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பதினோராவது மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிக்கான நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணைகளில் கல்வியமைச்சு மாற்றங்களை செய்துள்ளதால், மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குரிய அட்டவணையிலும் மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

இந்தப் புதிய நிகழ்ச்சி நிரலின்படி ஜூன் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 8 ஆம் திகதிவரை மாகாண மட்ட போட்டி நிகழ்வுகள் வவுனியாவில் நடைபெறும்.

போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்களை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்ப வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சந்தை குத்தகை வசூலித்த ஆறு பேர் சங்கானையில் கைது

யாழ்ப்பாணம் —

சங்கானை சந்தைக்குள் வைத்து ஆறு பேரை நேற்றுக் காலை இராணுவத்தினர் கைது செய்தனர்.

சந்தைக் குத்தகை வசூலித்துக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களிடமிருந்து பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் 15ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை மீட்டெடுத்தாக படையினர் தகவல் வெளியிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் மேலதிக விசாரணைகளுக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## இளைஞர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு —

அம்பாறை-விநாயகபுரத்தில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

கொலைசெய்யப்பட்டவர் விநாயகபுரத்தைச் சேர்ந்த குருகுலன் ரூபன் (வயது 18) என்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்களே மேற்படி இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் கூட்ட...

வடகிழக்கில் இராணுவத்தாலும், துணை ஆயுதக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கையை இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வெளியிட்டனர்.

இந்தக் கண்டன உண்ணாவிரதம் நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்படும்வரை தொடர்ந்து நடைபெற்றதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## விரைவில்...

இலங்கையிலுள்ள அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றே இந்த இனச்சிக்கலைத் தீர்க்கும் என்று இந்தியா நம்புகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சியாம் சரணும் உடனிருந்தார்.

## வெள்ளை வானில்...

சென்றதாகத் தெரியவருகிறது.

வெள்ளைநிற ஹைஏஸ் வானின் பதிவு இலக்கம் கடதாசி மட்டையில் தெளிவின்றி எழுதப்பட்டிருந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தவேளை - குறித்த இளைஞன் கடத்தப்பட்ட சம்பவம் பருத்தித்துறை நகரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஆழ ஊடுருவும்...

இவர்களைத் தேடிச் சென்றவேளை ஏ-9 வீதியின் மாங்குளத்துக்கு வடக்கே பனிச்சங்குளத்துக்கும் 18ஆம் போருக்கும் இடையில் கிழவன்குளத்துக்கு அருகிலுள்ள சவரிக்குளம் காட்டுப் பகுதியில் துர்நாற்றம் வீசியது.

இதனையடுத்து அங்கு சென்றபோது - பதுங்கு குழி ஒன்றிலிருந்து சிதைந்த நிலையில் இருவரது சடலங்களும் நேற்று மீட்கப்பட்டன.

சடலங்களின் தலைப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் காணப்பட்டதுடன், கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இணைத்தலைமை கூட்டத்...

தற்போதைய சிக்கலான நிலைமைகள் தொடர்பாகவும், அவற்றுக்குத் தீர்வு காண்பது குறித்தும் விவாதித்தோம்.

பொதுமக்கள் மீண்டும் யுத்தம் உருவாகிவிடும் என்று எண்ணுகின்றனர். தற்போதைய சிக்கலான நிலைமை அதிகரிக்காமல் இருக்க இரு தரப்பும் மேலதிகமாகச் செயற்படவேண்டும்.

இரு தரப்பாலும் முன்வைக்கப்படும் போர் நிறுத்த ஒப்பந்த மீறல் குறித்து அவதானமாகச் செயற்பட வேண்டியது அவசியமானது. இந்த நிலைமைகள் தொடர்பாக தமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை தமிழ்ச்செல்வன் எமக்கு விளக்கினார். இது குறித்து கொழும்பு சென்று அரச தரப்பினருக்குத் தெரியப்படுத்துவோம்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் கிழக்குத் தளபதிகள் ஆலோசனை நடத்துவதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்தும் விவாதித்தோம். ஜெனீவாவில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கேற்கவேண்டிய அவசியத்தை நாம் வலியுறுத்தினோம். அத்துடன் மேலதிக சில விடயங்களும் விவாதித்தோம். அதை ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்க முடியாது. அரச தரப்பினருக்குத் தெரிவிக்கப்படும்.

பொதுமக்கள் மீதான வன்முறைகளை நாம் கண்டிக்கிறோம். எந்த ஒன்றின் பேராலும் பாரபட்சமாகச் செயற்பட்டு வன்முறைகளை நிகழ்த்தக்கூடாது. போர்நிறுத்த ஒப்பந்த மீறல்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைகிறது. நிலைமை சிக்கலாக வுள்ளது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் நாளாந்தம் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து சர்வதேச சமூகம், இணைத்தலைமை நாடுகள் ஏன் கண்டனம் செய்யவில்லை. என்ற ஊடகவியலாளர்களின் கேள்விக்கு -

அனைத்து வகையான சம்பவங்களையும் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இந்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகள் கூட்டத்தில் இவை குறித்து விவாதிக்கப்படும். இந்தக் கூட்டத்தில் நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளுடன் இந்தியாவுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

## நாணய மாற்றுவீதம்

| நாணயங்கள் | கொள்வனவு விலை | விற்பனை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச |
| அமெரிக்க டொலர் | 102.33 | 103.38 |
| ஸ்ரேளிங் பவுண் | 189.47 | 192.52 |
| யூரோ | 129.34 | 131.81 |
| சுவிஸ் பிராங் | 82.62 | 84.72 |
| அவுஸ்ரேலிய டொலர் | 77.99 | 80.01 |
| சிங்கப்பூர் டொலர் | 64.84 | 66.19 |
| ஜப்பான் யென் | .91 | .93 |

| அரபு நாடுகளின் நாணயங்களின் சுட்டிய விலைகள் | ரூ. ச |
|---|---|
| பஹ்ரெய்ன் டினார் ஒன்றின் சுட்டிய விலை | 272.88 |
| குவைத் டினார் ஒன்றின் சுட்டிய விலை | 352.07 |
| ஓமான் றியால் ஒன்றின் சுட்டிய விலை | 267.21 |
| கட்டார் றியால் ஒன்றின் சுட்டிய விலை | 28.26 |
| சவூதி றியால் ஒன்றின் சுட்டிய விலை | 27.43 |
| ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹாம் ஒன்றின் சுட்டிய விலை | 28.01 |

# கைக்குண்டுத் தாக்குதல்

இணுவில் —

இணுவில் சந்திக்கு அண்மையில் உள்ள அறிவியல் கழகத்துக்கு முன்னால் உள்ள இராணுவ காவலரண் மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றிரவு 7.40 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த கைக்குண்டுத் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதும் சேத விபரம் வெளியாகவில்லை.

# கருணா குழு தாக்குதல்; 2 இளைஞர்கள் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு-காயாங்கேணியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் மீது கருணா குழுவினர் நேற்றுக் காலை மேற்கொண்ட துப்பாக்கிப்பிர யோகத்தில் இளைஞர்கள் இருவரும் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

நேற்றுக் காலை 10.30 மணியளவில் காயாங்கேணி இராணுவ முகாமுக்கு அருகில் இடம் பெற்ற இந்தச் சூட்டுச் சம்பவத்தில் பனிச்சங்கேணியைச் சேர்ந்த சீனித்தம்பி யோகேஸ்வரன் (வயது 21) என்பவர் தலையில் பலத்த காயமடைந்தார். இவருடன் சென்ற மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த இருவரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# தமிழர் மீதான வன்முறைகளை...

தமிழர் தாயகத்தில் இனப்படுகொலைகளையும், வன்முறைச் சூழலையும் உருவாக்கி ஒருயுத்தசூழ்நிலையை மக்கள் மீது திணித்துக்கொண்டு மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று போலித்தனமான அறிவிப்புக்களை அரசாங்கம் வெளியிட்டு வருகிறது.

ஜெனிவா பேச்சுக்குப் பின்னர் 148இற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நாளாந்தம் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர். பலர் காணாமல் போகின்றனர். பொதுமக்களை இலக்கு வைத்து அரசாங்கம் இத்தகைய வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

எமது தலைமைப்பீடம் மத்திய குழுக் கூட்டத்தை கூட்ட முடியாமல் எமது போராளிகள், தளபதிகள் போக்குவரத்தை அரசு முடக்கியதையும், தொடர்ச்சியாக பொதுமக்களைப் படுகொலை செய்து வன்முறைச் சூழலை உருவாக்கியிருப்பதையும் சுட்டிக்காட்டி பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின் கைகளில்தான் உள்ளது என்றும் ஜப்பான் குழுவினரிடம் கூறினோம்.

எமது மக்கள் மீது முழு அளவிலான யுத்தத்தைத் திணிக்க அரசாங்கத் தரப்பு அனைத்துவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுள்ளதையும் தெரிவித்துள்ளோம்.

அரசாங்கத்திடமிருந்து எமக்கு எதுவித செய்தியையும் ஜப்பானிய குழு கொண்டுவரவில்லை.

பொதுமக்களின் போக்குவரத்துக்களுக்கான பாதைகளை மூடி, மக்களைப் படுகொலை செய்வது என்பது அரச தரப்பால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிற ஒரு நடவடிக்கை. மாறாக, பொதுமக்களின் போராட்டங்களை கைவிடவேண்டும் என்று விடுதலைப் புலிகள் உறுதியளிக்க வேண்டும் என்பது போன்ற பொருத்தமற்ற காரணங்களை அரசாங்கம் கூறிக் கொண்டிருப்பது நியாயமற்றது.

பொதுமக்கள் மீது வன்முறைகளையும், படுகொலைகளையும் திணிக்கின்றபோது அவர்கள் கோபாவேசத்துடன் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாதது. இதற்காக விடுதலைப் புலிகளிடம் வாக்குறுதி கேட்பதும், விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துவதும் எந்த விதத்திலுமே பொருத்தமற்றது. இதைத்தான் இன்றைய சந்திப்பிலும் நாம் சுட்டிக்காட்டினோம்.

உடனடியாக இராணுவ வன்முறைகளை நிறுத்தி, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கின்ற இராணுவச் செயற்பாடுகளை நிறுத்தி பொதுமக்களின் வாழ்விடங்களில்லாத ஒரு பகுதிக்குள் இராணுவம் முடக்கப்பட்டால்தான் ஒரு சுமுக நிலையை உருவாக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளோம். போலியான குற்றச்சாட்டுக்களை எம்மீது சுமத்திக் கொண்டு பொதுமக்களைப் படுகொலை செய்து வருவதை ஒரு யுத்த சூழலாகவே நாம் கருதுகிறோம்.

போக்குவரத்துப் பாதைகளை இராணுவம் மூடி எங்கள் மக்கள் மீது நெருக்குவாரங்களை ஏற்படுத்துவது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும். இராணுவத்தின் இந்த நடவடிக்கையால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இராணுவத்தால் பாதைகள் மூடப்பட்டதால் வீதியிலேயே 6 மாத கைக் குழந்தை மருத்துவ வசதியின்றி மரணித்த சம்பவத்தையும் யசூசி அகாஷியிடம் சுட்டிக்காட்டினோம். அவர்களும் தமது வருத்தத்தைத் தெரிவித்தனர்.

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து பேணவோ, சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவோ கூடாது என்ற மனநிலையில்தான் அரசாங்கமும், அரச படைகளும் உள்ளன. இத்தகைய நடவடிக்கைகளானது ஒட்டுமொத்தமாகவே யுத்த நிறுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு யுத்தத்துக்குத் தள்ளுகிற செயலாகவே நாங்கள் பார்க்கிறோம் என்றும் அகாசியிடம் கூறினோம்.

தொடரும் இனப்படுகொலையை நாங்கள் அனுமதித்துக் கொண்டிருக்கமுடியாது. மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தினது இந்த வன்முறைப் போக்கை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச சமூகம் விரைந்து செயற்படவேண்டும். இல்லையெனில் விடுதலைப் புலிகள் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இப்போது யுத்தநிறுத்த சூழல் என்பது இல்லை. அடாவடிகளையும், வன்முறைகளையும் மக்கள் மீது ஏவிவிட்டுள்ளனர். இனப்படுகொலையை நிகழ்த்தி மக்களது இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் ஒரு யுத்த சூழல் தான் உள்ளது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடுகள் விரைந்து முடிவுக்குக் கொண்டு வரப்படாவிட்டால்- நிலைமைகள் மோசமடையும் என்றும் ஜப்பான் குழுவினரிடம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

சர்வதேச சமூகத்தின் விருப்பத்துக்கு முரணாகவும், தமிழ் மக்களின் விருப்பத்துக்கு முரணாகவும் தமிழர் தேசத்தில் அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடூர வன்முறை நிலைமைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். ஆகையால், தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய முடிவுகள் குறித்து சர்வதேச சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

விரைவில் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உருவாகியுள்ளது என்பதை எமது தலைமைப்பீடத்தின் சார்பில் ஜப்பான் சிறப்புத்தூதுவர் அகாஷியிடம் தெரிவித்தோம்.

தமிழர் தேசத்தில் போரை அரச படைகள் தொடங்கிவிட்டன. இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்குள் இளைஞர்கள், யுவதிகளை இலக்கு வைத்து படுகொலைகளைச் செய்து வருகிறார்கள்.

முகமாலையை அண்மித்த பகுதிகளில் படைகளை குவித்துவரும் இராணுவத்தால் வன்னி மீது ஒருபோதும் படையெடுக்க முடியாது. வன்னியை தமிழீழ விடுதலைப்புலிகள் பூரண கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் நெருக்குவாரங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் இலக்கான மக்கள் அங்கிருந்து தப்பி ஓடி வந்து ஓரளவுக்கு ஆறுதல் அடையக் கூடிய இடமாக வன்னிப்பெருநிலப் பரப்பு உள்ளது.

ஆகையால், அப்பாவி மக்களைத் தான் முழுமையாக படைத்தரப்பினர் இலக்கு வைக்கின்றனர்.

மக்கள் ஓரளவுக்கு பாதுகாப்பான பிரதேசங்களுக்கு நகர்ந்து கொண்டிருக்கின்றனர். எமது மக்களைப் பாதுகாக்க ஒட்டுமொத்தமாக எமது தேசமும், நாமும் விரைவில் தீர்மான மெடுக்க வேண்டிய சூழல் நெருங்கி வருகிறது.

தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை நடத்துவது என்ற பழைய நிலைப்பாட்டுக்கு அரசாங்கம் சென்றுள்ளது. இதை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும். இதைத் தடுக்க அரசாங்கத்தின் மீது கடுமையான அழுத்தங்களைச் செலுத்த வேண்டும் என்பதுதான் தமிழர் தரப்பின் கோரிக்கையாக சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

மக்கள் மீது பாரிய வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ள அரசாங்கத்துக்கு எந்த ஒரு செய்தியும் அனுப்பும்மனோநிலையில் நாங்கள் இல்லை.

இருதரப்பும் பேசி இயல்புநிலையை உருவாக்க வேண்டும் என்று- சர்வதேச சமூகம் விரும்புகிறது. ஆகையால், எங்களது நல்லெண்ண சமிக்ஞையை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. அந்த வகையில்தான் இந்தச் சந்திப்பு அமைந்தது.

அரசாங்கம் கூறுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒரு அப்பட்டமான யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல் என்றும், சர்வதேச சமூகம் இதை வன்மையாகக் கண்டித்துள்ளது என்றும் அகாஷியுடனான சந்திப்பில் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அரசு தொடர்ந்து தன்னுடைய படுகொலைகளை அரங்கேற்றி வருகிறது. சர்வதேச சமூகத்தின் கரிசனையை, விருப்பத்தை அரசு மதித்து நடந்ததாக அண்மைக் காலத்தில் எமக்கு எதுவும் தெரியவில்லை.

மக்களை ஒன்று திரட்டி மக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்துவிதமான செயற்பாடுகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தீவிரமாக இறங்கியிருக்கின்றனர் என்ற செய்தியை மக்களுக்கு தெரிவிக்கிறோம். மக்களும் அதற்கேற்ற வகையில் அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்வதுதான் இந்தக்காலகட்டத்தில் பொருத்தமானது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களைத் தவிர்ப்பதற்காக ஒரு பக்கத்தில், தாங்கள் ஏதோ சமாதான வழிமுறையில் ஈடுபாடு கொண்டவர்களாக போலியாக அறிவித்து வருகின்றனர். ஆயுதக்கொள்வனவு, ஆள் திரட்டல், படைகளை யுத்தத்துக்கு தயார்படுத்துதல், துணை இராணுவக்குழுவினரை துணைக்கு வைத்துக்கொண்டு புலிகளைச் சீண்டுவது போன்ற செயற்பாடுகளை அரச தரப்பு மேற்கொண்டு வருகிறது.

யுத்தகாலத்தில் நடைமுறையில் உள்ள ஒரே ஒரு செயற்பாடுதான் இப்போது செய்யப்படாமல் இருந்தது. அதாவது, பத்திரிகை தணிக்கை என்பதையும் இப்போது நடைமுறைப்படுத்தி உள்ளனர். தமிழ்த்தேசிய ஊடகங்களை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

சர்வதேசத்தில் பிரபலமான ஊடகவியாலாளர்கள் படுகொலை செய்யப்படுவதும், தமிழ்த் தேசிய ஊடகங்களை இல்லாதொழிப்பதுமான கொடூர செயற்பாடுகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

கிழக்கிலிருந்து வரும் தளபதிகளும், பாதுகாப்பாளர்களும் எப்போதும் தற்காப்பு ஆயுதங்களுடன் தான் வருவார்கள். அதில் எந்தவித மாற்றத்தையும் கொண்டுவரமுடியாது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள எங்கள் மக்களுக்கு எமது அரசியல் துறை போராளிகள் மூலமாக எங்களது செய்திகளை அனுப்பியுள்ளோம்.

பாதுகாப்பான பிரதேசங்களுக்குள் அவர்கள் நகர முடிந்தால் நகருவதுதான் பொருத்தமானது.

தொடரும் வன்முறைகளால் சில பாதுகாப்பு நடைமுறைகளை எமது மக்கள் பேணிக்கொள்ள வேண்டும். எமதுபிரதேசங்களுக்குள் இன்றும் பலர் வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகளை செய்துகொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.05.2006 அன்று பொன்னைய்யா குருகேஸ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.